வீசும் காற்றே தூது செல்லு
தமிழ் நாட்டில் எழுந்தொரு சேதி சொல்லு 2
ஈழத்தில் நாம் படும் வேதனைகள் 2
இதை எங்களின் சோதரர் காதில் சொல்லு

இங்கு குயில் இனம் பாட மறந்தது
எங்கள் வயல் வெளி ஆடை இழந்தது 2
தங்கைகளித் திரு மங்களம் பாடுது 2
சாவு எமக்கொரு வாழ்வென ஆனது

வீசும் காற்றே தூது செல்லு
தமிழ் நாட்டில் எழுந்தொரு சேதி சொல்லு

உங்கள் கொடி மலர் இங்கு மடியிது
ஊர் மனை யாவிலும் சாக்குரல் கேக்குது 2
இங்குள்ள பேய்களும் செய்ய மறந்ததை 2
உங்களின் ராணுவம் செய்து முடிக்குது

வீசும் காற்றே தூது செல்லு
தமிழ் நாட்டில் எழுந்தொரு சேதி சொல்லு

கத்திட கேட்டிடும் தூரமல்லோ
கடல் கை வந்து தாங்கிடும் நீழமல்லோ 2
எத்தனை எத்தனை இங்கு நடந்திட 2
எங்களின் சோதரர் தூக்கம் அல்லோ

வீசும் காற்றே தூது செல்லு
தமிழ் நாட்டில் எழுந்தொரு சேதி சொல்லு

வேங்கையை வேட்டைகள் ஆடுகிறார்
புலி வீரரை காட்டினில் தேடுகிறார் 2
தாங்க முடியல்லை வேதனைகள் 2
இதை தாயக பூமியின் காதில் சொல்லு

வீசும் காற்றே தூது செல்லு
தமிழ் நாட்டில் எழுந்தொரு சேதி சொல்லு 2
ஈழத்தில் நாம் படும் வேதனைகள் 2
இதை எங்களின் சோதரர் காதில் சொல்லு

இசைத்தட்டு : களத்தில் கேட்கும் கானங்கள்
பதிப்பகம் : அகம்